On the 21st of November 1953 about 25 members went out on a short tour to Swamimalai. In all these tours Mr. L. Rajagopalan of the Mathematics Department, has been an infallible guide, who offered us able assistance and valuable advice.

Ladies:

Miss. Haimavathi, of the English Department was nominated to be in charge of the sports activities of the lady students. They took part in the Inter Collegiate tournaments, and were beaten outright by the Holy Cross College, Trichy in all the games. They look forward to better luck next time!

Inter Collegiate:

In almost all the games except Basket ball and Volley ball, we were defeated in the first round itself. Our cricketers are shaping well and are in a fine fettle. The Basket ball team fought its way through, and came upto the finals; but they were defeated in the finals by St. John's College, Palamcottah. The Volley-ball team which has the services of two university players has come to the semi-finals and if everything goes on well we are looking forward to win the finals.

Houses:

All the students of the College have been divided into four houses namely Yellow, Green, Red and Blue. Sri V. Ramakrishnan, Sri K. N. Balasubramaniam, Sri P. Padmanabhan and Sri K. P. Vijayaraghavan who are members on the staff have been nominated as Patrons of the houses respectively. We are proud of the fact that three of our star athletes have donned the university colours this year. Sri G. Renganathan, I class (Volley Ball), Sri A. Swaminathan, II class (Volley Ball) and Sri D. Amaldas, IV B.A. (Javelin throw) have thus brought honour and glory for themselves and the College.

HE WON THE TEST!

[S. NARASIMHAN IV B.A.]

Latha's tired looks suggested that she was nursing worry. Yes, it was about the most vital problem of her life. She had to choose her life-partner and the choice of one had to be made from her two friends—Shekhar and Ramesh.

Shekhar and Ramesh were her classmates. They were her social equals. Both of them were handsome and behaved towards her gently. They used to visit her house very often of course, not together!

Each said he loved her. Each one of them had his own merits which gave her a headache in choosing her partner. Besides, her father had reiterated that it was no good allowing her two friends to come to her house so often. She had to choose one of the two soon.

Latha was the only daughter of a rich landlord. She had lost her mother quite early. She gave people the impression that she was mightily rich. Shekhar and Ramesh had proposed to her. She thought that they might have held her riches in view. You never know these men!

She hated to marry one who loved her for her money. She wanted to find out the one who loved her for her own sake. So she proposed to test whether Shekhar or Ramesh had real love for her.

An interesting item in the day's morning paper was the sudden crash of a sound Bank. She resolved to play a trick.

* * *

Next morning she rang up her two friends asking them to come to her house at 9 o' clock and they promptly turned up. She asked her servant to send one of them first and the next immediately after she had finished her interview with him.

Ramesh came in first. Latha was lying in the sofa with her face trembling in her couched hands. Ramesh was surprised.

"What is the matter, dear .... ?" he asked.

She was wearing a highly sorrowful expression. Her hair was dishevelled. Her eyes were ruddy and nose swollen. She should have been sobbing quite a long time.

" Come on, what has happened " asked Ramesh anxiously. Out came through her tears " I don't know how to say it all. Didn't you read in the papers the sudden crash of the .... bank? In that bank, we had deposited all our money. Now this crash has thrown us down right into a penniless state......... I am anxious that our relationship should not be affected by this ... ...". She was slyly reading his face. He grumbled in evident displeasure. It left a bad taste in his mouth. How suddenly his attitude to her changed! " Sorry to hear that. Shall see you bybye ". He was off in a moment.

Next came the second suitor. Of course he could not have heard the previous talk. She repeated the same piece of acting to him. Shekhar's attitude was different. " Oh, dear! How did it enter your mind that our relationship might be affected by this? Never, never. You need have no apprehensions. Our love will outlast all crashes!" He looked sincere and emphatic.

"Are you sure" ? asked she. "of course ! " was the reply.

Latha leaped for joy. She narrated the whole trick to him and said at last " I am glad you have sincere love for me. You have won the test!".

Shekhar took it all easy. He was not at all angry that she had played the trick on him. That again impressed her.

As he moved out of the room, promising to come back the same evening, she heard him saying to her servant. "Thank you for your timely hint. Take this for your pains. Had you not told me about the trick that she was to play on me, I should have lost all her property, O kay." He went away.

Her head Reeled!

TRUE EDUCATION

(By Sri Swami Sivananda)

Our present day schools and colleges give secular education. There is neither ethical discipline nor spiritual instruction. The students have no spiritual, high ideals of life. They learn something in order to eke out their livelihood. This is indeed very sad.

Owing to the influence of dark, antagonistic, materialistic forces most of the students of the present day turn out to be spiritual bankrupts in the end. There is no moral culture in them. They have no understanding of the principles of Brahmacharya and right living. Hence they suffer much when they come out to face the battle of life.

Our students have become creatures of vile imitation. They have imitated the West in smoking, putting on pants, hats, boots, neck-ties, collars, cropping of hairs, etc. But they have not imbibed the various other virtuous qualities such as self-sacrifice, patriotism, sprit of service, punctuality, perseverance, tolerance, erudition etc., that are admirable characteristic features in the westerners.

Taking a degree in the university is not real culture. What is wanted is moral culture, ethical culture, knowledge of the Self, regeneration of the lower nature, good behaviour, refined manners, discipline of the indriyas, control of the mind and cultivation of divine virtues. This rare discipline cannot be had in the present day universities. A drastic change in the curriculum of the universities is needed. Books that are best calculated to give moral culture should be introduced. Students should have proper eithical training. Then only a university can turn out students of proper education and culture.

The students are the future citizens of the country. They are the wealth of the state. They are the valuable assets to the nation and the country. They must be allowed to express their latent or dormant faculties

through proper education and culture. If they are endowed with the sterling qualities of head and heart, they will shine as luminaries in this world.

Spiritual culture is a *sine qua non* and a great desideratum for national regeneration. The goal of life is Self-realisation. Spiritual culture alone can develop the will-force and make people unselfish, fearless and courageous, strong, and remove the lower vrittis of mind. Those who are unselfish alone can really serve the country, can work in terms of unity and can have real cosmic love for all.

Education should teach the pupils to love God and every creature of the world. Education should instruct the students to be truthful, moral, fearless, humble and merciful. Education should teach the students to practise right conduct, right thinking, right living, right action and self-sacrifice and to attain knowledge of the Self.

Education aims at cultivating good ideas and expressing them in a beautiful, intelligible manner after clarifying them with the scientific or mathematical accuracy.

The real work of all universities must be to unite man with man. The main purpose of education must be to make man a real man with all divine attributes.

Education must be best calculated to promote plain living and high thinking. Each student must be taught that his first and foremost duty is to serve the suffering humanity and cultivate universal brotherhood.

Educate your eyes to see God in all faces, to behold unity of Self in all beings. Educate your ears to hear the lofty teachings of the scriptures and hymns and prayers. Educate your tongue to sing the praise of the Lord and to utter pleasant, loving and truthful words. Educate your hands to serve the needy, help the poor, nurse the sick and to do charity. Educate your mind to be always cheerful and calm, and to think of the Immortal Soul. This indeed, is real education.

Dear Prem! Study diligently. Apply tenaciously. Behave politely. Obey implicitly. Pray whole-heartedly. Speak sweetly. Stick resolutely.

Think usefully. Act righteously. Endure courageously. Persevere patiently. March boldly. God be with you! Peace be with you.

May you all be endowed with true knowledge of real education! May the universities, schools and colleges become dynamic centres of real education and culture! May you all understand the real purpose of education and goal of life! May the heads of educational institutions possess right understanding and true knowledge to guide the students on the right path! May you all enjoy the supreme peace of the Eternal!!

Sri N. KANAKARAJA IYER, M.A.,M.E.S.

Sri N. Kanakaraja Iyer was born in Madura in September 1898. As a boy he lost his father and would not continue his secondary education beyond the Third Form. He joined the Tamil School conducted by the Madurai Tamil Sangam, where his study under the learned Pandit Sri Narayana Iyengar laid the foundations of his great scholar-ship in Tamil. For obtaining the first rank in passing the Pandita Pariksha he got prizes and a Toda. After passing the I B Vidwan of the Oriental Titles Examination, he got himself trained as a Pandit. When he was serving as a Pandit in the Pollachi High School, the Principal of the Pudukkottai College came to know of his abilities and invited him to join the staff of his College, which he did in 1930. While there, by dint of hard work and study he took the B. O. L. degree, and just before he was transferred in 1952 to the Government College, Kumbakonam as Lecturer in Tamil, he took his M. A. degree. Besides this scholarship in Tamil, he also acquired a mastery in English and Sanskrit, and a working knowledge of Hindi. Thus his life is an example of what a man can achieve if he only has the will.

What is more remarkable in him than even his great scholarship, is his poetic ability. He writes poetry as he writes, and that, very good poetry. There is no type of literary composition in Tamil which he has not touched, and he has several Pillai Tamizh, Parani, Kalambakam, Atruppadai etc. to his credit. Some of his major poetical works are a historical drama titled Marainda Managar, a translation of the ten principal Upanishads, Sankara Vijayam, and his Magnam opus, the Hanumat-puranam in more than 12,000 stanzas (about 50,000 lines). Besides writing a number of text books for students, he has translated the Kama Sutra of Vatsyayana from the original Sanskrit and the Dharma Pada, a Buddhistic work, from the original Pali. Such are his achievements.

With all this, he is simple and unassuming, ever ready to help and never giving way to passions. With unbounded faith in a wise providence, he is a blithe spirit, free from care. It is really a loss to us, that such a man has gone away from us, but these things must happen, and what we have lost, the Kalakshetram Adyar has gained.

செர்சோபா நீர்வீழ்ச்சி (மைசூர்)

க. இராமையன் II I. M. L. T·

இளமாங் குயில்பல பாடும் — அந்த
இசைதனை யேற்றாடும் மயிலும்
களங்கமில் பார்வையி னாலே — நமது
கருத்தினைக் கவரின மானும்
உளத்தினை உவகையி லாழ்த்தும் — பல
உருவநி றக்கிள்ளை பாடும்
வளமலி காடொன்று தோன்றும் — அந்த
வண்ண நெடுவரை தன்னில் 1

கண்டே னருவிநீர் வீழ்ச்சி — அது
கண்ணுற்றார் கவலைக்கோ மீட்சி
கண்டவர் உளங்கவர் காட்சி — அது
கவினிறை காவிய எழுச்சி
தண்டமிழ் கொண்டதைப் பாட — மிக்க
தகவுடைத் தாமென வோர்ந்து
பண்ணமை பனுவலா யாத்தேன் — அதில்
பயன்விளை காட்சிகள் காண்பீர் ! 2

ஓராயிரம் மடியுயர் அருவி — அது
உள்ளத்தி னுவகைக்கோ கருவி
பேரின்பம் பெருக்கிடும் ஆங்கே — பல
பெருஞ்சுனை கொண்டதோர் அருவி
பேரொலி யெழுப்பிய வண்ணம் — பெரும்
பள்ளத்தில் வீழ்ந்திடக் காண
ஊரும் நரம்பெல்லாம் மச்சம் — ஆனால்
உளமெலாம் உவகைமீக் கொள்ளும் 3

கரையது யேறிட்ட நானும் — ஆங்கோர்
கருநிறப் பாறையி லமர்ந்தேன்
தரையதை நோக்கிட நானும் — எனது
தலையினைக் கவிழ்த்திட்டேன் ஆகா !
வரையரை யின்றியும் வளர்ந்து — ஆங்கே
வளம்பொலிந் தெழிலொடு விளங்கும்
வரையதன் தோற்றமுங் கண்டு— இயற்கை
வயப்பட்டிவ் வுலகையே மறந்தேன், 4

"இயற்கை இன்பம்"

[ந. ரெங்கராஜலு, இளங்கலை வகுப்பு]

கதிரவனின்றும் பிரிந்து வீழ்ந்த ஒரு பகுதிதான் இந் நிலப்பரப்பும், நீர்ப்பரப்பும் ஆகும் என்பர் ஆராய்ச்சியாளர்கள். இப்படி வீழ்ந்த அப்பகுதி நாளடைவில் குளிர்ந்துப் பின் புல் பூண்டுகள், செடி, கொடிகள், மரங்கள் ஆகியவைகள் தோன்றுதற்கு ஏற்றதன்மை பெற்றதும் இவ்வகைப்பட்ட பகுதியைத்தான் நாம் இயற்கை என்கிறோம். காரணம் இந் நிலப்பரப்பும், நீர்ப்பரப்பும் நம்மால் ஆக்கப்பட்டவைகள் அல்ல. கதிரவனின் வெம்மையும், திங்களின் தண்மை பொருந்திய நிலவும் மனித முயற்சியால் ஆக்கப்படுபவை அல்ல. மனித இனம் தோன்றுவதற்கு முன்னரே இவைகளெல்லாம் தோன்றிவிட்டன.

இந்த இயற்கையைப் பெரும் புலவர்களெல்லாம் **இயற்கை யன்னை** என்ற பெயரிட்டு அழைத்தனர். ஆக்கும் சத்திபெற்ற இயற்கையை அன்னை என அழைத்தல் பொருத்தமுடைத்தாம். இயற்கையூட்டிய இன்பத்தின் விளைவாகவே இன்றைய உலகம் உருவாயிற்று என்று கூறுவது பலபடியும் உண்மை. மனிதனை, மாநிலத்தை, ஆழ்கடலை, உயர்குன்றை, மணியாறுகளைப் படைத்த இயற்கை, தானே தனது அளப்பரும் ஆற்றலாலே மனித இனத்தை உருவாக்கியது.

மனிதன் பின் தன் அறிவின் வளர்ச்சியைக்கொண்டு, இயற்கையில் பனி உறைந்து வெள்ளப்பெருக்குடன் ஓடிவரும் பேராற்றின் குறுக்கே பாலங்களையும், நீர்நிலைகளையும், நீர்த்தேக்கங்களையும் ஆக்கி தனக்குப் பயன் படுத்திக்கொள்ள வாரம்பித்தான். ஓர் உயர்ந்த உள்ளம் படைக்கப்பெற்ற மனிதனது கண்களிலே—இயற்கை ஒரு வடிவிலே மட்டுமல்ல, பல பதினுயிரக் கணக்கான வடிவுகள் காட்டிற்று. அறிவால், உளத்தால், உடலால், மற்று எவற்றாலும் இயற்கை, மனிதனது உயிரேறிக் கலந்துவிட்டது. இந்த இயற் கையிலே பொதிந்திருக்கும் இன்பங்கள் அனைத்தையும் கிளரித் துய்த்திடத் துடித்த இதயங்கள் இன்பொழுகு அழகுணர்வில், மாழ்கி மாழ்கி, மயக்குற் றிருந்த நிலைகளும் பல உண்டு.

இயற்கை முல்லையாகவும், குறிஞ்சியாகவும், மருதமாகவும், நெய்தல் நிலமாகவும், அவ்வவ் நிலங்கட்கேற்ப அகவொழுக்கம் சிறந்தமையவும், புற வொழுக்கம் மேம்பட்டு நிற்கவுமாக மிளிர்ந்தது. மனிதர் கதிரவனையும், காற் றினையும், மழைத் தெய்வமென்று கருதப்பட்ட வருணனையும், அக்கினியையும் தொழுதனர்.

இயற்கைதான் மக்களுக்கு மொழி பேசும் திறனையளித்தது. காடுகளிலே திரிந்து வாழ்ந்த ஆதிப்பெண்ணும், ஆதி மனிதனும் வனவிலங்குகளைக் கண்டு ஒதுங்கியிருந்திருக்க வேண்டும். ஒதுங்கியிருக்கும்போது வனவிலங்குகள் ஓடியாடி வருவதைக்கண்டு அவர்கள் மகிழ்ச்சியினாலும் பயத்தினாலும் "ஓ" "ஐயோ" போன்ற ஒலிகளை யெழுப்பியிருப்பர். இந்த ஒலிகளுக்குப்பின் சைகைகள் பக்குவநிலையை அடைந்திருக்கவேண்டும். இப்படிப்பட்ட ஒலிகளும் சைகைகளும் வளர்ச்சிபெற்று நாளடைவில் மொழியாயிற்று. மொழிக்குப்பின் வரிவடிவம் ஏற்பட்டது.

இயற்கையுடன் போராடிப் போராடிப் பழகிய மக்கள் அதிலே நுகர்ந்த இன்பமும், பெருமிதமும் எண்ணுள் அடங்காதனவாகும். காணுவதெல்லாம் இயற்கையாகக்கண்ட மக்கள் அதனுள் கண்ணுக் கப்பாலாய் புதைந்திருந்த இன்பத்தினை நுணுகிக்காண விழைந்தனர். அவர்தம் கண்களுக்கு இயற்கை எத்துணையோ நிலைகளிலே ஒளியூட்டிற்று.

விரித்தடக்க வியலாதவராய், வான் விளைத்த பெருவியப்புக் கோள்கள் பலவாய், நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து "நிலவு" என்று காட்டுகின்ற ஒளி முகமாய், அஞ்சொல் அழகியர்தம் ஆற்றொணாத்துயர் கண்டு கண்கள் சிவக்கக் கடல் மூழ்கி வெளிக்கிளம்பும் காலைக் கதிரவனும், வைரமணி பதித்த ஒளித்தோகை விரித்துக் களிநடம் புரியும் மென்மயிலின் நெஞ்சத்துப் பெருமகிழ்வாய்ச் சூழும் கருமுகிலாய், அம்முகில் தான் பெற்ற கைம்மாறு கருதாத மாரியாய், கோடைக் கொடுமை தவிர்க்கவென்று வானிடைப் பிறந்து, மலையிடைத் தவழ்ந்து, மலரிடை மணம்மொண்டு சில்லென்று மேனி சிலிர்க்க வீசும் மென் காற்றாய், அகிலாய்த் தேக்காய், அழியாக் குன்றாய், இன்னபிறவாய் எண்ணற்ற கோலங்களிலே இன்பம் பெய்தது இயற்கை.

கலைஞன் கண்ணிலேபட்ட இயற்கை, அவனிதயத்திலே தேன்மாரி பொழிந்ததுமட்டுமன்றி, அவன் நாவிலே நடம்புரிந்துக் கவிதை உருவேற்றுக் கற்போர் கேட்போர் இதயமெல்லாம் ஊடேறிப் பாய்கின்ற இன்ப வெள்ளமாய் மாறிவிட்டது. கவிஞர்தம் உள்ளத்தைக் கொள்ளைகொண்டதோடன்றி அதைச் சிறைபிடித்தது இயற்கையின்பம். கவலற்ற நெஞ்சுடன் கூவிப் பறந்து, வஞ்சகம் பொறாமையற்ற வாழ்வினைப் பெற்றுள்ள புள்ளினம் கவிஞர் நெஞ்சிடைப் புரண்டு நாவிடை எழுந்து, மக்கள் வாழ்விடை நீதி கூறி நிற்கிறது. அழகான மான் உயிர் உணர்வுடைய ஒளியுள்ள கண்களைக்கொண்டு அன்பாகப் பார்க்கிறது. உரமான உருவம், அச்சுறுத்தும் கண்களும் கொண்ட புலி அதைப் பார்க்கிறது. மனித இதயத்தை இன்பப் பார்வையால் அழகுத் தோற்றத்தால் ஈர்த்து ஆடிய மென்மானைப் பார்த்து, அவ் வலி வேங்கைப் பாய்ந்து கிழித்துக் கொல்கின்றது. மனித இதயத்திலே கூறிய வேல் பாய்கிறது. வலுவான புறா, மென்மையான பிறவினைக் கொன்று வாழ்

கிறது. உயிர் உயிரைச்சார்ந்தே மட்டுமன்றி—ஒரு உயிர் ஒரு உயிரினது அழிவிலே வாழ்கிறது. இது இயற்கையின் மாற்றமுடியாத வியத்தகு அமைப்பு.

புலவர்கள் இயற்கையுடன் ஒன்றிவாழ்ந்தனர். இயற்கையில்லையேல் இலக்கியங்கள் இந் நன்முறையில் அமைந்திருக்காது. புலவர்கள் செடி கொடிகளையும், மலைகளையும் நீர் அருவியையும் பார்த்துப் பரவசமடைந்தார்கள். வோர்ட்ஸ் வொர்த் (**Wordsworth**), என்ற ஆங்கிலக் கவிஞன் "சிறிய அல்லி மலராகிய உன் வழியாக **இறைவனைப்** பார்க்கின்றேன்" என்று அல்லிமலரைப் பார்த்து பாடுகின்றான். காட்டிலே இருக்கின்ற மரங்கள் முளைக்க வித்திட்டது யார்? பின் அதற்கு நீர் வார்த்தது யார்? இயற்கையன்னைதான் அவற்றை ஆக்கிக் காக்கிறாள் என்பது வெள்ளிடைமலை. ஷெல்லி (**Shelley**), பைரன் (**Byron**), கீட்ஸ் (**Keats**) போன்ற ஆங்கிலக் கவிஞர்களும், உமார் கய்யூம் (**Omar Khayam**) போன்ற பாரசிகக் கவிஞர்களும் இயற்கையின் வியத்தகு செய்கைகளைப் புகழ்ந்து பாடி இருக்கிறார்கள். ஆகையினாற்றான் அப் புலவர்களை இயற்கைக் கவிஞர்கள் என்று அழைக்கின்றோம். டென்னிசன் (**Tennyson**) என்ற ஆங்கிலக் கவி இயற்கையின் தூய தன்மையினைப்பற்றி நிரம்பப் பாடியிருக்கிறார்.

மேலைநாட்டுக் கவிஞர்களைப்போல், தமிழகக் கவிஞர்களும் இயற்கையை ஆராய்ந்திருக்கிறார்கள். சங்ககாலக் கவிஞர்களிலிருந்து இன்றையநாள் வரையில் உள்ள கவிஞர்கள் வரை யாரும் இயற்கை யன்னையைப் பாடாதவர்களில்லை. மலர்ந்தமலரிலிருந்து தேனைப் பருக வண்டினங்கள் வரும்போது பாடிவரும் காட்சியினைக்கண்ட புலவர்கள் "செவ்வண்டுஹறப்ப" என்று பாடினார்கள். திங்கள் ஒளியுடன் திகழும்போது கடல் தன்னுடைய வெள்ளலைக் கரங்களை நீட்டி அவனைத் தழுவத் துடிக்கின்றது. அத் திங்களின் தண்ணொளி காதலர்களுக்குத் தெவிட்டி இன்பத்தினை யளிக்கிறது. இதுபற்றிப் பாடிய புலவரொருவர் "கோலமுழுதும் காட்டிவிட்டால் காதற்கொள்ளையிலே உலகம் சாமோ" என்று பாடியிருக்கிறார். மாலைக் கதிரவன் மேற்கடலில் சாயும் போது தோன்றும் காட்சியை "பொன்னுருக்கு வெள்ளத்தில் செம்பரிதி மிதக்கும் நேரம்" என்று பாடினார். இயற்கைப் பொருள்களெல்லாம் அழகு பெற்று விளங்கின. இது குறித்துத்தான் ஓர் ஆங்கிலப் புலவர் "எழில் கொண்டதோர் பொருள் என்றைக்கும் இன்பம்" "**A thing of beauty is a joy for ever (—Keats)**" என்று பாடினார்.

இயற்கைதான் எல்லாவிதச் செயல்களுக்கும் காரணப் பொருள் என்று கருதிய சிலப்பதிகாரத் தந்தையான சேரமான் இளங்கோவடிகள் அந்நூலைத் தொடங்குமுன் "ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்" என்று போற்றிப் பரவினர். பின் திங்கள், மாமழை முதலிவைகளைப் பரவிப் பாடினார். இதைப் போல் நற்றிணை, குறுந்தொகை முதலிய நூல்கள் இயற்கையின் அழகைப்பற்றிய செய்திகள் மிகக்கொண்டிருக்கின்றன.

இன்பப் பொழிலின்கண் மனிதன் திளைத்திருக்கப் பயன் கருதாத பணிபுரிகிறது இயற்கை. அந்த இன்பத்திற்கு இணையுமுண்டோ வெனக் கவிஞன் பாடிப்பாடி ஓய்ந்துவிடுகிறான். தாமரைப் பூத்த குளத்தினிலே, முகத்தாமரை தோன்றி மறைந்திடவே, நீராடிக்களிகூறும் நங்கைகளும், அவர் முக மொத்த ஒளியுடைய நிலவும், அது அடர்ந்த முகிலினைக் கிழித்துக் கொண்டு வரும் அழகும், இதயத்தை இன்பப் பெருக்கிலே திளைக்க வைக்கிறது. “களுக்” கென்று சிரித்திடும் முல்லைகளும், “உஸ்” எனச் சீறியாடும் நாணலும், ஆற்றோர மரங்களும், அவற்றினில் காதலிசைபாடி வட்டமிடும் வண்டினங்களும், இரைச்சலுடன் ஓடிவரும் பேராறுகளும் அருவிகளும், ஆகாய முட்டுமொரு உயர்மலை யழகும் இயற்கைதரும் இன்பங்கள்தான்.

இயற்கை இன்பத்திற்கு இணையேதும் இருந்திடமுடியாது. அது மனித நெஞ்சத்தைப் பலபடியும் தெளிவாக்கவல்லது.

"சிலை அழுதது"

[T. V. சேஷாத்திரி IV B. A iv b/8]

அப்பொழுது பிரேம் கலாதேவியின் சிலையைச் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். மாலைச் சூரியன் மறைந்துகொண்டிருந்தான். அப்பொழுது தைமூர் மன்னன் தன் மகள் ஸாராவுடன் Friday Mosque-க்கை முதல் தடவையாகப் பார்வையிட வந்து கொண்டிருந்தான். அரசனைக்கண்ட பிரேம் வணக்கம் செலுத்தி தான் பாதி கட்டியிருந்த மசூதியைக் காட்டிக்கொண்டே போனான். அப்பொழுது மன்னர் மகள் ஸாராவைக் கவனித்தான் பிரேம். அவளும் இவனைப் பார்த்துவிட்டாள். இருவர் உடலிலும் ஒரு வர்ணிக்கமுடியாத உணர்ச்சி தோன்றியது. கண்டதும் காதல் என்பது மெய் என்பார்கள் சிலர்; பொய் என்பார்கள் பலர். ஆனால் அது பிரேமின் விஷயத்தில் மெய்யாகவே ஆகிவிட்டது. இது அவர்கள் முதல் பார்வையில்....... .

ஆனால் இப்பொழுது இதெல்லாம் பழைய விஷயம். மசூதியைப் பார்வையிட வரும் சாக்கில் பிரேமைப் பார்த்துப்பேச பலதடவை வந்துவிட்டாள் ஸாரா. பிரேமும் சதா அவளைப்பற்றியே நினைத்துக்கொண்டிருந்தான். அவன் வேலையில் ஈடுபட முடியவில்லை. எப்பொழுதும் எங்கும் ஸாராவின் உருவே அவன் மனக்கண்ணில் தெரிந்து வந்தது. வீணாக வளர்த்துவானேன்? இருவர் காதல் மொக்கு மலராக மாறிவிட்டது.

அன்று ஸாரா வந்துபோனபின் பிரேம் தன் வேலையில் ஈடுபடவேண்டும் என்று தீர்மானித்துவிட்டான். முன்பெல்லாம் அவன் கலைக்காகவே வாழ்வதாக எண்ணி வந்தான். ஆனால் இப்பொழுது ... ... அவன் ஒரு அணங்கின் அன்பனாக ஆகிவிட்டான். அவன் மனதில் கலையா அல்லது காதலா என்ற போராட்டம் பல தடவை எழ ஆரம்பித்துவிட்டது.

அப்பொழுது தான் அரைகுறையாக செய்துவைத்திருந்த கலாதேவியின் சிலையைப் பார்த்தான். இன்று அதில் ஒரு புதுமை இருந்தது. பிரேமிற்கு அந்த சிலை அழுவதுபோல் தோன்றியது. மேலும் உற்றுப் பார்த்தான். அந்தச் சிலையின் விம்மல் சத்தமும் அவன் காதுகளில் விழுந்தது. சிலை ஏதோ சொல்வதுபோல் தெரிந்தது. மேலும் கவனித்தான். "பிரேம்! கலை அமரத்துவம் பெற்றது. உன் காதலோ உங்கள் மறைவுக்குப்பின் மறைந்துவிடும். ஆனால் உங்கள் அழிவிற்குப் பின்பும் கலை உங்கள் புகழைப் பரப்பும்; நீ என்னையே விரும்பு. இனி நீ காதல் வாழ்வில் மயங்கிவிடாதே" என்று அச் சிலை கூறியதுபோல் தோன்றியது.

பிரேம் தன் சிறுவயதிலேயே தான் கலைக்காகவே வாழப்போகிறேன்; அதற்காக என் உயிரையும் கொடுக்கத் தயாராவேன் என்று தந்தையிடம் உறுதிமொழி கூறியிருந்தான். அந்த வார்த்தைகள் இப்பொழுது அவனுக்கு ஞாபகம் வந்துவிட்டது. கடைசியில் கலையே வென்றது.

அன்று பிரேம் மன்னரைப் பார்க்கச்சென்று, அவர் தோட்டத்திலிருக்கிறார் என்று தெரிந்துகொண்டு தோட்டத்தை அடைந்தான். ஆனால் தைமூர் அப்பொழுது

த்தான் தோட்டத்தைவிட்டு போனார். ஆனால் அவர் மகள் ஸாராமட்டும் அங்கு சோகக் கண்ணீருடன் உட்கார்ந்துகொண்டிருப்பதை பிரேம் பார்த்தான்.

"ஸாரா! உன் தந்தை .... "

"அரண்மனைக்கு இப்பொழுதுதான் கிளம்பினார்".

"சரி! நீ ஏன் என்னவோபோல் இருக்கிறாய்"

"நீதான் அதற்குக் காரணம்"

"நானா?. . . ."

"ஆம்! இரண்டு தினங்களாகவே என்னை நீ பார்க்கவிரும்பாததுபோல் இருக்கிறாய். அதன் காரணம"

"ஸாரா! நானே உன்னிடம சொல்லவேண்டும என்று இருந்தேன். இவ்வளவு நாட்களாக என் மனதில் ஒரு தவிர்க்கமுடியாத சங்கடம ஒன்று இருந்துவந்தது. கலை பெரிதா? காதல் பெரிதா? என்று எனக்குப புரியவில்லை. இவ்வளவு தினஙகளாக உன்னைப் பார்க்குமபோதெல்லாம் காதலே பெரியது என்று எண்ணுவேன். என் கலா தேவியின் கண்ணீர்விடும் சிலையைப் பார்த்தவுடன் கலையே பெரிது என்று தோன்றும். இந்தப் போராட்டம் இரண்டுநாள் முன்புதான் முடிந்தது."

"உன் முடிவு... .. .."

"கலைதான் பெரிது ஸாரா!"

"அப்படியென்றால்... ...."

"என்னை மறந்துவிடு"

"பிரேம்! நான என்ன இன்று அழகில் குறைந்துவிட்டேனா"

"இல்லை ஸாரா! நாளுக்குநாள உன் அழகு அதிகரிக்கத்தான் செய்கிறது"

"பிரேம்! நாம இருவரும வேறுமதம எனபதால் என்னை வெறுக்கிறாயா?"

"ஸாரா! உன்னை நான் வெறுககவில்லை. இருண்டு கிடக்கும் என இதயத்தில் இருக்கும் இன்ப ஒளி நீ! மேலும் ஜாதி மதம் என்னிடம் ஒன்றும செய்யமுடியாது. நான் மட்டும் மனதுவைத்தால் உன தந்தை எதிர்த்தாலும் சரி உன்னைக கைவிடாமல் காப பாற்றுவேன். ஆனால் என் சிலை உன்னைவிட என்னைக் கவர்ந்துவிட்டது. ஸாரா! நான் என்றும் உன்னை என் மனதிலிருந்து மறக்கமாட்டேன்; என் மனம் மட்டும மாறினால் உன்னையே நான் மணக்கிறேன்"

"உன் மனம் ... ."

"எப்பொழுது மாறும் என்று எனக்கே தெரியாது. நான் வருகிறேன்" என்று சொல்லிககொண்டே போய்விட்டான்.

வெகுதூரம் போகும் வரையில் ஸாராவின் விம்மல் பிரேமின் காதில் விழுந்து கொண்டுதான் இருந்தது. தான் இளவரசியுடன் பேசிய வார்த்தைகள தவறோ என்று நினைத்து மன்னிபபுக் கேட்கலாமா என்று தோன்றியது. 'ஆனால் அவன அந்த வழியில்

அவன் கட்டிவரும் மகுதி மலையாகி மறைத்தது. முடிவு என்னவாயினும் சரி என்று வீட்டிற்குப போயவிட்டான்.

மறுநாள் மாலை மன்னர் அவசரமாக அழைக்கிறார் என்று தெரிந்துகொண்டு அரண்மனைக்குச் சென்றான் பிரேம்.

அரசன மிகவும கோபமாக இருப்பான் எனறு எண்ணினான் பிரேம். ஆனால் அரசன் கவலைதோய்ந்த முகத்துடன இருந்தான். பிரேமைத் தனியாக ஒரு அறைக்கு அழைத்துச சென்றான.

"பிரேம்! என மகளை நீதான் காப்பாற்றவேண்டும்"

"அரசே! அதுமட்டும் என்னால் முடியாததிற்கு வருந்துகிறேன்"

"நேற்று ஜுரமாகப படுத்துவிட்டாள. ஸாரா எப்பொழுதும் பைத்தியம்போல் உன் பெயரையே சொல்லிக்கொண்டிருக்கிறாள். அவளது நோயக்குக் காரணம் மனோநிலை தான் என்றும, அவள இஷ்டத்தைப் பூர்த்திசெய்தால்தான் அவள் பிழைப்பாள் என்றும் வைத்தியர்களும கைவிட்டுவிட்டார்கள"

"அரசே! அது என்னால் முடியாத காரியம்"

"வேறு மதம என்று தயங்குகிறாயா? நீ அவளை மணந்துகொண்டால் உன்னையே இந் நாட்டு அரசனாக்குகிறேன்?

"அரசே! அரச பதவியை நான் விருமபவில்லை. நான் கலை உலகிலேயே இருக்க விரும்புகிறேன்"

"என் மகள் அழகாக இல்லையா பிரேம்"

"அதனால்தான் நான் அவளை மணக்க விரும்பவில்லை. அவளைச் சந்தித்த போதெல்லாம் நாங்கள் இருவரும் இவ்வுலகைப் பிரிந்து எங்கோ இருப்போம். வெகு நேரம் ஆனபின்பே மீண்டும் இவவுலகிறகு வருவோம். ஆனால் நான் அடைந்த இன்பம் அவள சென்றதும் போய்விடும். ஆனால் சிலைகளைச் செதுக்குவதில் நான் எல்லாவற்றையும் மறந்துவிடுகிறேன். நான் அதில் காணும் இனபம் நிலையுள்ளது. ஆகையால்.........

"பிரேம் நீ பேசுவது... ....

"ஸாமர்கண்டு மன்னர் தைமூருடன் என்று தெரிகிறது"

"பிரேம்! நீர் இதற்கு ஒபபுக்கொள்ளாவிட்டால் உன் தலை துண்டிக்கப்பட்டு விடும்"

"அரசே! அன்று என்னை இந்நாட்டிறகு அனுப்புமுன் தாங்கள் டில்லி தர்பாரில் கூறிய வார்த்தைகள" என்றவுடன் தைமூரின முகம் விகாரமடைந்தது. அவன் மனம் கடந்த காலத்தைச் சுற்றிவர ஆரமபித்தது. எங்கு திரும்பினாலும் சரி டில்லி தர்பார் காட்சியே அவன் கண்முன் தெரிந்தது.

அப்பொழுது பிரேமை இரண்டு சேவகர்கள் அழைத்துக்கொண்டு வந்தார்கள். டில்லியில் சூறையாடிக்கொண்டிருந்த தைமூர் சிம்மாசனத்தில் அமர்ந்துகொண்டிருந் தான்.

" அரசே! தாங்கள என்னை அழைத்துவரச் சொன்னதாக கேள்விப்பட்டேன்" என்று வணக்கத்தோடு கூறினை பிரேம்.

இந் நகரில் பல பிரதான கட்டிடங்களைச் செய்த தலைசிறந்த சிறபி நீ தானே?

" ஆம் அரசே! தங்கள் கலையன்பைப் பாராட்டுகிறேன்"

" நீ என் சொற்படி நடக்கமுடியுமா "

"அரசே! தாங்கள் என்ன சொன்னலும் சரி அதன்படி நடக்கிறேன்". ஆனல்......

"ஆனல்......

„நான் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவன்"

" பிரேம்! நான் ஹிந்துக்களின் விரோதிதான். இருந்தாலும் என் மதத்தைப் பரப்புவதற்கு நான் அவர்களை இம்சிக்கிறேன். மேலும நான் சிற்பகலைகளை மிகவும ஆதரிபபவன். என்போன்ற கலைஞன் எம் மதமாயினும் சரி அவனை ஒன்றும செய்வ தில்லை என்று அல்லாவின்மீது ஆணையிட்டிருக்கிறேன்.

" அரசே! தாஙகள் இதிலிருந்து தவறிவிட்டால்....... ...."

" பிறகு உயிர்வாழுமாட்டேன். இதுமட்டும உறுதி "

" அரசே! தங்கள மதப்பற்றையும், கலையன்பையும் பாராட்டுகிறேன்"

" நீ உன் கலைக்காக உயிரையும் கொடுப்பாயல்லவா ?"

" ஆம் அரசே!"

'அப்படியென்றல் நீ என் நாட்டிற்குவந்து பல கலைக்கூடங்களை எழுப்பவேண்டும்.

ஹா!

" ஏன் பயபபடுகிருய. உன்னையும் உன் சக சிற்பிகளையும் என் மகன்போல் பாது காக்கிறேன்"

"அரசே! தாஙகள் எந்த மசூதியைக்கட்ட கட்டளையிட்டாலும் அம மசூதியில் வாயிலில் எங்கள் நாட்டு கலாதேவியின் சிலையையும் வைபபது என் வழக்கம். தாங்கள் இதற்கு ஒப்புக்கொண்டால்... . ..."

" சரி " எனறு கடைசியில் ஒப்புக்கொண்டான் தைமூர்.

இந்தக் காட்சியே தைமூா எங்கு திரும்பினுலும் தெரிந்தது. உடனே பிரேமின் பக்கம் திரும்பி " யோசித்து உன் முடிவைத் தெரிவி. நாளை மாலைக்குள உன் முடிவைத் தீர்மானித்துவிடு. நீ போகலாம்" என்று ததும்பும் கண்ணீருடன பிரேமிற்கு விடை கொடுத்தான்.

ஆனல் நாட்கள் சிலவற்றிலேயே ஸாராவின் உயிர் மெல்ல மெல்ல பிரிய ஆரம்பித்து விட்டது. அன்று பிரேமை அழைத்துவர ஆணையிட்டான் தைமூர். பிரேமும் ஸாரா இருந்த அறையில் நுழைவதும அவள் உயிா பிரிவதும் ஒன்றுக நடந் தது. தைமூர் மயக்கமடைந்து விட்டான் மகளின் பிரிவால்.

ஸாராவின் சடலத்தின்மேல் விழுந்து கதறினன் பிரேம். "ஸாரா! உன் அன்பை ஏற்றுக்கொள்ள முடியாத பாவியாகிவிட்டேன். என்னை மன்னித்துவிடு" என்று கூறி அழுதான் பிரேம். மயக்கம் தெளிந்த மன்னன் மனம மாறிவிட்டது. மகளின் மரணத்திற்கு காரணமான பிரேமைத் தண்டிக்க நினைத்தான். ஆனல் அவன் இட்ட சபதம் அவனைத் தடுத்தது.

மாதங்கள் மாறி மாறி வந்துவிட்டன. தன் மகளை மீண்டும் காண விரும்பினன் தைமூர். அதற்காக பிரேமும் வரவழைக்கப்பட்டான். பிரேமிடம் தைமூர் "பிரேம" என் மகளைப பிரிந்து என்னல் வாழமுடியவில்லை. எங்கு திருமபினலும் அவள்தான் தெரிகிருள். நீ சிலதினங்களில் அவளைப்போன்ற ஒரு சிலையைச் செய்து தரவேண்டும்" என்று பாதி சொல்வதற்குள்ளேயே பிரேம் "அரசே தங்கள் உத்தரவை எதிர்பார்க்காமலேயே நான் ஸாராவின் பாதி சிலையைச் செய்திருக்கிறேன்" என்றவுடன் "ஹா! அப்படியா அச் சிலையை நான உடனே பார்க்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே பிரேமையும அழைத்துக்கொண்டு வெளியேறினன் தைமூர்.

இதற்குப் பிறகு ஒருவாரம் சென்றது. மகளின் பிரிவு மன்னனை மிகவும் வாட்டியது. மகளின் நினைவாகவே படுக்கையில் படுத்துவிட்டான். அன்று மன்னன் ஜுரம் சறறு குறைந்தது. அப்பொழுது ஸாராவின முழுச்சிலையுடன் அவ்வறையில் பிரேம நுழைந்தான். மகளைக கண்டதும் மன்னன் உலகத்தையே மறந்துவிட்டான். அதுவரை நடககக்கூட முடியாதிருந்த அவன் இப்பொழுது ஓடிவந்து மகளின் சிலையைக் கட்டிக்கொண்டு அழுதான். "ஸாரா! என்னைவிட்டு எப்படிப் பிரிந்துபோனய் இவ்வளவு நாளாக? இனி நீ என்னைப் பிரியமாட்டேன் என்று சொல்" என்றன் தைமூர்.

மகளிடம் மன்னனுக்கு உள்ள பாசத்தைக் கண்டு பிரேம் வியப்படைந்தான். மறுமுறையும் தைமூர் அதே வார்த்தைகளை சொன்னன். "என்னைப் பிரிவதில்லை என்று சொல். என்னைப் பிரிவதில்லை என்று சொல்" என்று கதறினன். சிலை பேசுமா. நேரம் கடந்துதான் உணர்ந்தான். தான் கட்டிக்கொண்டு அழுவது ஸாரா அல்ல. அவளது வேடம் தாங்கும ஒரு ஊமைச் சிலை என்று, சிலையை உற்றுப்பார்த்தான். முன்பு கலைக்கண்களுடன் கண்ட அவனுக்கு ஸாராவின் சிலை உயிருள்ளதாகப்பட்டது இப்பொழுது.

சாதாரணமான கண்களால் மறுபடியும் பார்த்தான். அது பேசாத அசையாத ஸாராவின சிலை. பிரேமையும் சிலையையும் மாறிமாறிப பார்த்தான். அரசனுக்கு எல்லையில்லா கோபம் வந்துவிட்டது.

"பிரேம் இறந்த என் மகளை மீண்டும் உன்னல் தரமுடியாது. முடியுமானல் அவள உருவம தாங்கும் ஒரு கல்லைத் தரலாம. என் மகளைக் கொன்ற குற்றம் உன்மேல் சாட்டப்பட்டிருக்கிறது. அதறகுத் தண்டனை...........

"அரசே தாங்கள் தண்டிப்பது"

"பிரேம் என்று தெரியும்"

"இல்லை. தாங்கள் ஒரு கலைஞனைத் தண்டிக்கிறீர்கள். என் உயிருள்ளவரை மகனைப்போல் என்னை பாதுகாப்பேன் என்று அனறு ஆணையிட்டீர்களே.........

தைமூர் முழுவதையும் கேட்கமுடியவில்லை. அவன்தான் முன்பே மயக்கமடைந்து விட்டானே.

இதன்பிறகு அரசனின் கட்டளைப்படி ஸாராவின் சிலையை அம் மசூதியின் ஒரு உயரமான இடத்தில் ஜனங்களின் பார்வையில் படும்படி வைக்கப்பட்டது. அதற்கு மறு புறத்தில் கலாதேவியின் சிலையை வைக்க பிரேம் முனைந்துகொண்டிருந்தான். அன்று அரசன் இறந்துவிடுவான் என்று எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. பிரேமைக் கூப்பிட்டு கூறத்தொடங்கினன், "பிரேம்! என் மகளைக்கொன்று அதன்மூலம் என்னையும் கொன்றுவிட்டாய். என்னுயிர் உள்ளவரை உன்னை தண்டிப்பதில்லை என்று கூறினேன். அதன்படி நான் இறந்த மறுகணமே உன் தலை துண்டிக்கப்பட்டுவிடும். நீ போகலாம்" என்று நாத்தழுதழுக்க மல்கும் கண்ணீருடன் பிரேமிடம் தைமூர் கூறினன்.

அதற்குப் பிறகு எந்நேரமும் தன்னுயிர் போய்விடும் என்று கலாதேவியின் சிலையை மும்முரமாக அன்று முடித்தான். ஆனால் மன்னன் மாண்டுவிட்டான் என்ற செய்தி காட்டுத்தீபோல் பரவியது. பிரேம் தன் தெய்வத்தை வணங்கிக்கொண்டான். அப்பொழுது உருவிய வாளுடன் இரண்டுபேர் பிரேமை நோக்கி வந்தனர்.

பிரேமின் நடுங்கும் கையில் ஒரு சீட்டைக் கொடுத்தார்கள். அது மறைந்த மன்னர் தைமூரின் மனம் மாறியக் கட்டளைக் கடிதம். பிரேம் அதைப் படித்ததும் கவலைப்பட்டு கண்ணீர்விடவில்லை; ஆச்சரியமடைந்தான் அதற்குப் பதிலாக. அக் கலைஞனின் மரண தண்டனையைக் குறைத்து கலையின் பெயரால் இரு உயிரைப் பலி வாங்கிய கலைஞனின் வலது கையை வெட்டிவிடும்படி உத்தரவிட்டிருந்தான். மன்னரின் தண்டனை சில நிமிடத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

இப்பொழுது இதெல்லாம் நடந்து வெகுகாலம் ஆகிவிட்டது. பிரேம் இன்று ஒரு கிழப்பிச்சைக்காரன். அம் மசூதியின் வாயிலிலே உட்கார்ந்துகொண்டு பிச்சை யெடுத்துவந்தான். நாட்களின் தேய்விலே அவன் உடலும் தேய்ந்தது. மசூதியைப் புகழ்ந்த பலரிடம அதைக் கட்டியவன் நான்தான் என்று சொன்னன். அதை நம்ப ஒருவரும் தயாராக இல்லை. பலதடவை மயக்கமடைய ஆரம்பித்தான். கால்வயிறுகூட சில தினங்கள் நிரமபாது. அப்பொழுதெல்லாம் தன் தலையின்மேலே இருக்கும் சிலை யிடம் கூறுவான்.

"ஸாரா! கலையை நம்பி நான் அடைந்த நிலையைப்பார். கலையைவிட காதல் பெரிது என்று இன்றுதான் உணர்கிறேன். உன்னை நான்மட்டும் மணந்திருந்தால் மாளிகையில் மகிழ்வோடு இருப்பேன். "ஸாரா! உன்னை வெறுத்த வாலிபனின் வாழ்வைப் பார். காலில் விழுந்தும உன்னை உதறித்தளளியவன் கதியைப் பார். கலை யென்று ஒன்றுமில்லை. எல்லாம் பொய் வெளிவேடம். ஸாரா! என்னை மன்னித்துவிடு. என்னை மன்னித்துவிடு" என்று சிலசமயம் பைத்தியம்போல் கூறுவான். ஆனல் அருகிலிருக்கும் கலாதேவியின் சிலையைப் பார்த்ததும் அவன் கொள்கை மாறிவிடும். ஏன்?

அச்சிலை இவனைப் பரிதாபமாகப் பார்ப்பது இவனுக்குத் தெரியும். பிறகு "ஸாரா! என்னதான் நான் இந்நிலையை அடைந்தாலும் கலைதான் பெரிது. உன் நெஞ்சு கல் நெஞ்சாகவேதான் இருக்கிறது. ஆனல் என் கலாதேவியின் மனம் இளகுகிறது என்னைப் பார்க்கும்போதெல்லாம்" — இப்படியெல்லாம் பிதற்றுவான்.

பலர் அவனைப் பைத்தியக்காரன் என்றுகூட பட்டம் சூட்டினார்கள். அவன் தலை நன்றாக நரைத்துவிட்டது. கண்கள் குழிவிழுந்துவிட்டன. ஒருநாள் ஸாராவின் சிலையைப் பார்த்து சபதம் செய்தான். "ஸாரா நான் கலையை இவ்வளவு நாளாக நம்பி உயிரையும் மதிக்காது வாழ்ந்துவந்தது உண்மையானால், அந்தக் கலைக்காக உன்னையும் உன் தந்தையையும் பலிகொடுத்த என்மீது நீயே விழுந்து என்னைக்கொன்று வஞ்சம் தீர்க்கவேண்டும்".

வெகுநாட்கள் சென்றன. அன்றுமாலை அவன் மகுதியின் வாயிலில் மயக்கமாக விழுந்துகிடந்தான். சிறுமழை பெருமழையாகியது. தென்றலாகிய காற்று பெருங் காற்றாகி புயலாக மாறிவிட்டது. ஸாமர்கண்டு நகரமே அல்லோகலப்பட்டது. பல கட்டிடங்கள் தரைமட்டமாயின. எங்கும் சாவின் குரல்.

பிரேமின் மயக்கம் வெகுநேரம் கழித்து தெளிந்தது. எங்கும் புயலின்வீச்சு தாங்கவில்லை. மெதுவாக எழுந்திருந்து மகுதிக்குள் மழைக்காக ஒதுங்கிக்கொள்ள நினைத்தான். அப்பொழுது அவன் சபதம் பலித்து அவனை ஒரு கலைஞனாக்கியது.

வைக்கப்பட்டு வெகுகாலம் ஆகியிருந்த ஸாராவின் சிலை புயற்காற்றில் பெயர்ந்துவிட்டது. ஒரு பெரிய சத்தத்துடன் பிரேமின் தலையில் விழுந்து அவனைக் கீழே தள்ளிவிட்டது. பிரேமின் மண்டை உடைந்தது. அவனைக் காப்பாற்ற ஒருவரும் அங்கு இல்லை. ஸாராவின் சிலை சிதறிக் கிடந்தது. சாகும்முன் அவன் கட்டிய கலைக்கோயிலைப் பார்க்க நினைத்து எழுந்திருக்க முயன்றான்; முடியவில்லை.

ஸாராவின் சிதறிய உடலைப் பார்த்தான். அவள் பிரேமின் சபதத்தை தீர்த்து வைத்துவிட்டாள். அதுமட்டுமல்ல. அவனை ஒரு உண்மைக் கலைஞன என்று நிரூபித்தாள். தன்னைக் கலைஞன் என்று காட்டிய ஸாராவை மனதால் வணங்கினான். இப்பொழுது காதலும் கலையும் இரண்டும் சிறந்தது என்று தோன்றியது. தன் தந்தையிடம் கூறியமொழிகள் உண்மையானதற்கு ஆனந்தமடைந்தான் பிரேம்.

அப்பொழுது அவன் கண்கள் இருண்டன. தலை சுழன்றது. விநாடிகள் சிலவற்றில் விண்ணையடைவோம் என்று தெரிந்துகொண்டுவிட்டான். உலகம் தலைசிறந்த கலைஞன் ஒருவனை இழக்கத் தயாரானபின் அவனால் என்ன செய்யமுடியும். கண்களை மூடுமுன் கலாதேவியின் சிலையைப் பார்த்தான்.

அவன் காதில் ஏதோ விம்மும் சப்தம் விழுந்தது. சிலையை வெறித்துப் பார்த்து உடனே திருப்தி அடைநதான். சாகும் அவனைத் திருப்தியடைய அந்தச்சிலை செய்ததென்ன? தன்னை செய்த கலைஞனின் மறைவுக்காக அச்சிலை செய்தது வேறு ஒன்றும் இல்லை. அந்தச் **சிலை அழுதது.**

"அஹிம்ஸா உதயம்"

[R **வரதராஜன்** IV B. A. IV B/S]

அந்தி வானம் செக்கச்செவேலென்றிருந்தது. சந்திரன்கூட அந்தப் பயங்கரத்தைப் பார்க்கப்பயந்துதானோ என்னவோ பதுங்கிக் கிடந்தான். கலிங்கத்தின நதிகளில் எல்லாம் குருதி வெள்ளம் பெருகி ஓடிக்கொண்டிருந்தது. அந்தச் சமர்க்களத்திலே, சகிக்கமுடியாத அமைதி குடிகொண்டிருந்தது. பெருங்குழப்பத்திற்குப்பின் அமைதியைத் தவிர வேறென்ன ஏற்படக்கூடும்.

அந்தப் பயங்கரமான அமைதியைக் கிழித்துக்கொண்டு குதிரையொன்றின் குளம்பொலி கேட்டது. வெண்புரவியொன்று மிக்கக் களைப்புடன வந்துநின்றது. மன்னன் அசோகன் அப்புரவியின் **மீ**திருந்து மிக லாவகமாக இறங்கினான. வாகைமாலை சூட வேண்டிய நேரத்தில் மன்னனுக்கு ஏனோ யுத்தக்களத்தைப் பார்வையிட வேண்டுமென்ற எண்ணம் தோன்றிற்று. மௌரியரின் மாபெரும் படை கலிஙகப படையினரை கொன்று குவித்திருந்தது. மன்னன் திடசித்தனாயிருந்தும் மனம் சலனம் அடைந்தது. வேதனையின் சாயை முகத்தில் படர்ந்தது. ஏதோ ஒன்று பெரும்பாரமாக மனதை அழுத்தியது. மேலும் அரசன் சுற்றிப்பார்கக மனம் இடங்கொடா நின்றது. அப்படியே அருகில் இருந்த கல்லின்மேல், முகத்தைக் கைகளால் தாஙகிக்கொண்டு உட்கார்ந்தான் மௌரிய மன்னன். சிறிதுநேரம் அவன் மனம சிந்தனைசக்தியற்று இருந்ததுபோல் தோன்றியது.

கார்காலத்து நள்ளிரவில் நாலாபுறமும் வானத்தில் கன்னங்கரிய மேகங்கள் திரண்டிருந்தாற்போன்ற இருள் அரசனின் உள்ளத்தைக் கவிந்துகொண்டிருந்தது. ஒரு சின்னஞ்சிறு விண்மீனின் மினுக்மினுக்கென்னும் ஒளிகூட அந்தக காரிருளில் காணமுடியவில்லை வேந்தனால். ஆனால் திடீர் திடீரெனறு சிலசமயம் பேரிடிமுழககத்துடன்கூடிய மின்னல்கள் — கீழ்வான முகட்டிலிருந்து மேல்வான முகடுவரையில் அக்காரிருளைக் கிழித்துக்கொண்டு பாய்ந்த மின்னல்கள — கண்ணைப்பறித்து மண்டையைப் பிளக்கும் மின்னல்கள் — அசோகனின் மன ஆகாசத்தில் தோனறததான் செயதன. அந்த மின்னல் ஒளியெல்லாம் ஆயிரமாயிரம் கூரிய வாள்களும் வேல்களும் போர்க்களத்தில் ஒன்றோடொன்று உராயும்போது சுடாவிட்டு ஒளிர்ந்து உடனே மறையும் மின்னல்களாகவே மன்னனுக்குத் தோன்றின. கேணியில் உள்ள தண்ணீரை இறைத்துவிட்டால், அடியில் உள்ள நீர் குபுகுபுவென்று மேல் வருமல்லவா? அதேபோல் அரசனின் இதய ஊற்றிலிருந்து யுத்தத்தின் கொடுமைகளைபபற்றிய எண்ணங்கள் இடைவிடாமல் மேலே மேலே வந்து மறைந்துபோய்க்கொண்டிருந்தன. "மனித ரத்தத்தைக் குடிப்பதைககாட்டிலும், ஓடு ஏந்துவதே மேன்மையானது" என்ற அர்ஜுனனின வாக்கு மன்னனின் மனதில் மின்னலைப்போல் தோன்றியது. "போர்க்களத்திலே புறங்காட்டி ஓடுவது க்ஷத்ரியனுககு அழகன்று. ஓடுவது கோழைத்தனமாகும்" என்ற கிருஷ்ணபரமாத்மாவின் வார்த்தைகள மன்னனின் காதுகளில் இன்னமும் ரீங்காரம் செய்துகொண்டிருந்தது. மன அரங்கிலே கடும போர் நிகழ்ந்துகொண்டிருந்தது.

நீருண்ட மேகங்கள் இரையுண்ட பாம்பைப்போல் ஊர்ந்து சென்றன. சிறிது நேரத்திற்குப் பிறகு, முகில்களுக்கிடையிலிருந்து வெளிவந்த சந்திரன் பூர்ண பொலிவுடன் பிரகாசித்தான். மன்னனின் நெற்றியிலிருந்த சுருக்கங்கள் ஒவ்வொன்றாக மறைந்தன. முகம் சற்று தெளிவடைந்தது. அப்புவியாளவோன் ஏதோ முடிவுக்கு வந்துவிட்டான்போலிருந்தது. உற்சாகத்துடன் எழுந்து குதிரைமீதேறி பாசறை புகுந்தான். காவலாளனை, மந்திரிகளையும், சேனாதிபதியையும் அழைத்துவர ஏவினான்.

மந்திரியும், சேனாதிபதியும் பாசறைக்கு வந்துசேர்ந்தனர். அவாவும், ஆச்சர்யமும் ஒருங்கே அவர்கள் ஒவ்வொருவர் முகத்திலும் காணப்பட்டன. அசோக சக்ரவர்த்தி வழக்கத்தைவிட மிடுக்கான நடையுடன் வந்து அமர்ந்தான். மிகவும் தெளிவான ஆனால் உறுதியான குரலில் பேச ஆரம்பித்தான் மன்னன். "அமைச்சர்களே! சேனாதிபதி!! உங்களுடைய மகத்தான கலிங்கவெற்றியை நான் பெரிதும் பாராட்டுகிறேன். நம் வீரர்களின் தீரத்திற்கு ஒரு பெரும் சான்றாகவே இந்த யுத்தம் அமைந்திருக்கிறது. என்னுடைய எல்லையில்லா மகிழ்ச்சியைத் தெரிவிக்கமட்டும் உங்களை நான் இங்கு அழைக்கவில்லை. இதுவரையில் கண்மூடித்தனமாக யுத்தவெறியினால் உந்தப்பட்ட நான் யுத்த அரக்கன் பின்விட்டுச்செல்லும் பரிதாபமான நிலையைச் சிறிதும் சிந்தித்ததில்லை. யுத்த அரக்கனின் பெயரால் பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சில ஆயிரம் பேர்கள் சிறைபிடிக்கப்பட்டிருக்கிறார்கள். உயிருக்காக, உடைமைகளை விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தவர்கள் எத்தனையோ பேர். கணவன்மார்களை இழந்து தவிக்கும் அபலைகள் எத்தனையோ பேர். இவைகளை (நேருக்குநேர்) கண்கூடாக கண்டபிறகு என் மனம் என்றுமிலா அமைதியின்மையை அடைந்துவிட்டிருக்கிறது". இப்பொழுது மன்னர் சிறிதுநேரம் மௌனமாயிருந்தார். அந்தச் சிறிதுநேரமும் அமைதி அங்கே தனி அரசு செலுத்திக்கொண்டிருந்தது. மறுபடியும் சொன்னான் அரசன் "ஆகையால் என் வாழ்நாளில் முதலும் கடைசியுமான யுத்தம் இந்தக் கலிங்கபோர்தான். இனி எக்காரணத்தைக்கொண்டும் யுத்தம்செய்து ரத்தம் சிந்தி என் ராஜ்யத்தை விஸ்தரிக்க நான் அவாக்கொள்ளவில்லை. பௌத்த மதத்தைத் தழுவ நிச்சயித்துவிட்டேன். அஹிம்சாமூர்த்தியான புத்தரின் அருள்மொழிகள் நம்நாட்டு அரசியல் சட்டமாகட்டும்' என்று கூறிமுடித்தான் மன்னன்.

அமைச்சர்களிடையே மிகுந்த பரபரப்பு காணப்பட்டது. அவர்களில் சிலர் மன்னனுக்குப் புத்தி பேதலித்துவிட்டதோ என்று சந்தேகமுற்றதாக தோன்றியது. இதென்ன இவ்வரசன் யுத்தம்செய்து ராஜ்யத்தை விஸ்தரிக்கவேண்டிய தருணத்தில் யுத்தத்தையே பஹிஷ்காரம் செய்யப்போகிறேன் என்கிறானே என்று ஆத்திரப்பட்டனர். அவர்களில் ஒருவனுக்குமட்டும் கண்கள் கொவ்வைக்கனியைப்போன்று சிவந்திருந்தன. அவனுடைய மார்பு புயலால் தாக்குண்ட கடலைப்போல் மேலே பொங்குவதும் கீழே அடங்குவதுமாக இருந்தது. சேனாதிபதியைத் தவிர வேறு யாருக்கு அவ்வளவு ஆத்திரமும் படபடப்பும் ஏற்படக்கூடும். தன் இடத்திலிருந்து துள்ளியெழுந்து "மதியிற்சிறந்த மன்னரே! தீர்க்கதரிசிகளும், ராஜதந்திரிகளும் வீற்றிருக்கும் இச்சபையில் யானும் ஒரு வார்த்தை உரைக்க அனுமதிகோருகிறேன். தங்களை நான் அவமதிப்பதாகக் கருதக்கூடாது. மௌரியகுலத்தையும், மௌரிய ராஜ்யத்தையும உலகம் என்றென்றைக்கும் அவமதிக்காமல் இருக்கவேண்டுமே என்றுதான் கவலைப்படுகிறேன். யுத்தம்செய்து நாட்டை மேலும் மேலும் விஸ்தரிக்கவேண்டிய இந்தச்சமயத்தில் தாங்கள் யுத்த பஹிஷ்காரம் செய்வது மிகவும் பொருந்தாத ஒரு போக்கு. இம்மௌரிய ராஜ்யத்

தின் பிரஜைகள் எல்லாம் சுத்த வீரர்கள்—மானத்துக்காக உயிரையும் உடைமைகளையும் புல்லென மதிக்கிறவர்கள். யுத்தத்தினால் ஏற்படும் கஷ்டங்களுக்காக அவர்கள் சிறிதும் அஞ்சுபவர்களில்லை. ஆகையால் யுத்தபஹிஷ்காரத்தை ரத்துசெய்யுங்கள் மஹாராஜ்” என்று மிகவும் ஆங்காரத்துடன் சொன்னான்.

மன்னன் சிறிதும் பதட்டமடையாத குரலில், புன்னகையோடுகூடிய முகத்துடன் கம்பீரமாகச் சொன்னான். “சேனாபதி! உலகம் நீர் நினைப்பதுபோல் அவ்வளவு பைத்தியக்கார உலகம் அல்ல. மனிதர்கள் எல்லோரும் அவ்வளவு முட்டாள்களும் அல்ல. அப்படியே இருந்தாலும், அதற்காக நானும் முட்டாள்தனமான காரியத்தைச் செய்யமாட்டேன். நாட்டின் பிரஜைகளை அனாவசியமான அல்லல்களுக்கு உள்ளாக்க என் மனம் இணங்க மறுக்கிறது. இந்த மணிமகுடம் என் தலையில் சூட்டப்பட்ட அன்று, இந்தச் செங்கோலை முதன்முதலாக என் கையில் ஏந்திய அன்று “இந்நாட்டு மக்களின் உயிரையும், உடைமைகளையும் காப்பேன். அவர்களுக்கு இன்னல்கள் ஏதும் வராமல் தடுப்பேன்” என்று நாடறிய, உலகமறிய வாக்குறுதி கொடுத்திருக்கிறேன் “உலகில் யாரேனும் ஏதேனும் சொல்வதற்காக நான் என் வாக்குறுதியைக் கைவிடமுடியாது. இனிமேல் ஆயுதம் தாங்கிய கைகள் உளிகளேந்தி அஹிம்சாமூர்த்தியின் அருள்மொழிகளை ஸ்தூபிகளை அமைத்து பொறிக்கட்டும்.”

எல்லோரும் அரசனின்கூற்றை ஆமோதிப்பதேபோல் அமைதியாக இருந்தார்கள். மன்னன் அவர்களைத் தான் சோம்பேறிகளாக வாழச் சொல்லவில்லையென்றும், அவர்களுக்கு மற்றொரு வெற்றி காத்துக்கிடக்கிறதென்றும் அறிவுறுத்தினான். தன் அடக்கத்தினால் ஆத்மவெற்றி அடைவதே மற்ற வெற்றிகளைவிட போற்றத்தக்கது என்றுரைத்தார். அன்போடு மற்றவர்களுக்குத் தொண்டுசெய்வது அவர்களுடைய ஆதரவைப்பெற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மறுநாள் ஆதவன் உலகுக்கு மன்னன் அசோகனின் அஹிம்சா தத்துவத்தை பறைசாற்றிக்கொண்டு, தங்கக் கிரணங்களோடு தன் பவனியை ஆரம்பித்தான். பாடலீபுரம் ஒரு தனிசோபையுடன் விளங்கியது. ஜனங்களிடையே அதீதமான உற்சாகம் காணப்பட்டது. நடன அரங்கங்களும் நாடகமேடைகளும் புத்துயிர்பெற்றன. அங்கங்கே தாளச்சத்தத்துடன் பாதச்சதங்கையொலியும் எழுந்தது. நாடுமுழுவதிலும், உளிகள் கற்களைச் செதுக்கும் சப்தம் நிறைந்திருந்தது. மலை, குகை, பாறை இவைகளிலெல்லாம் பௌத்த தர்மங்கள் செதுக்கப்பட்டன. ஸாஞ்சியிலுள்ள ஸ்தூபி இன்றும் பௌத்த தர்மங்களையும், அசோகரின் அஹிம்சா தர்மத்தையும் உலகுக்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

|| श्रीः ||

|| श्रीशार्ङ्गपाणिस्तवः ||

R. Appannachar, B. A., B. T., Rashtra Bhasha Visarad, (Old Boy)

श्रीशार्ङ्गपाणे वस कुंभघोणे
गृहाण वा कोमलवल्लिपाणिम् ।
अनन्यसाधारणसुन्दराङ्ग
निजं समाच्छादय वापि शार्ङ्गम् ॥ १ ॥

तथापि राजेति गृहीतनामा
ज्ञातो बुधैस्त्वं हरिरेव साक्षात् ।
त्वमेव राजा परमार्थरीत्या
नान्योऽस्ति नानार्थविचारतोऽपि ॥ २ ॥

अशार्ङ्गपाणिः खलु शार्ङ्गपाणीः
रमापतिः कोमलवल्लिकान्तः ।
वैकुण्ठवासोऽसि च कुंभघोणे
जानाति को वा परमार्थतस्त्वाम् ॥ ३ ॥

अनन्तकल्याणगुणौघपूर्णं
त्वां सा कथं स्तौति मिता मतिर्मे ।
प्रमातुमाकाशमनादि नित्यं
बालाङ्गुली स्यात्किमलं समर्था ॥ ४ ॥

तथापि वाचां हि विशुद्धिहेतोः
प्रसादहेतोरपि शार्ङ्गपाणेः ।
श्लोकस्य लेशोऽपरिगेयकीर्तेः-
श्श्लोकैः प्रगीतो मम मेयबुद्धेः ॥ ५ ॥

॥ साहित्य और विज्ञान ॥

(जी. सीतारामन).

भगवान ने इस जगत की सृष्टि करके अपनी अपार शक्ति का, कृपा का प्रदर्शन किया। उसके बच्चे मनुष्य ने उसकी शक्ति और कृपा का, इस जगत की प्रकृति में, परिचय पाने की चेष्टा की। जगत की प्रकृति में छिपी शक्तियाँ जब कभी प्रकट हो जाती थीं, तब मानव पहले बहुत भयभीत हुआ, सृष्टिकर्ता से कृपा की भीख मांगते-मांगते उनकी शक्तियों से स्नेह स्थापित करने लगा। उसका वह स्नेह भयकातर था; पर मूक नहीं था। उस सृष्टिकर्त्ता के पुत्र ने सृजन-व्यवसाय के पैतृक प्रभाव से भाषा की रचना की और अपनी मनोगत भावनाओं को उसके द्वारा उद्घोषित किया। उसने जो दुनियाँ बाहर देखी उसके अनुरूप अपने भाव जगत में भाषा के रंग से रंगकरके साहित्य लोक की रचना कर दी।

बाह्य जगत के परिवर्त्तनशील तथा नश्वर चित्रों को मनुष्य ने साहित्य लोक की अमर चट्टानों पर अंकित कर दिया। उसने वहां एक दूसरी ही दुनियाँ की सृष्टि कर दी जहाँ की प्रकृति, यहाँ की अपेक्षा, अधिक चित्ताकर्षक, जहाँ के प्राणी यहाँ की अपेक्षा अधिक चेतनायुक्त दीख पडते हैं। स्वनिर्मित साहित्य लोक के सत् चित आनन्द आदि गुणों से तृप्त न होकर मनुष्य ने वाह्य जगत में भी उन्हीं गुणों का दर्शन करना चाहा। उसने सोचा कि केवल मैं ही अब जगतपति का अंश नहीं हूँ, इस सारी प्रकृति में भी उनकी शक्तियाँ बुनी पडी हैं।

उसने पहली बार जब मेघ को गरजते देखा तो पहले घबराया तो सही, बाद को उसने अपने कल्पित देवता इन्द्र को मेघ का संचालक नियुक्त कर दिया और वह दिन आ गया जब कि उसने मेघ पर हिमकण बरसाकर पानी निचोड लिया और उसके जल देह को फोडकर बिजली को हडप लिया। सागर अपने लहर-करों से मनुष्य को मारकर जो हटाता था उसने उसकी छाती को नाव और जहाज से चीर डाला और बडी निठुराई से अपने लिए सुगम मार्ग बना लिया।

उसे प्राकृतिक शक्तियों को निकालकर काम में लाने में कई शताब्दियाँ गुजारनी पडीं। अल्प जीवी मनुष्य प्रकृति दर्शन के अपने अनुभवों की स्मृतियों को साहित्य

लोक के अमर पाषाणों पर अंकित करता रहा जिससे आगे की पीढ़ी उनसे लाभ उठा सके। वाल्मीकि ने पक्षि को आकाश में उडते देखा और उसीकी आंखें लेकर वायुमण्डल का भ्रमण किया। पर सुब्रह्मण्यभारतीने वायुयान पर बैठकर गगनक्रीडा की और उसका वर्णन किया। तृषित कवि-हृदय की चाहों को मिटाने में विज्ञान का बडा हाथ रहा है। भारती ने स्वदेश के लिए उज्ज्वलतम भविष्य का आह्वान करते हुए कहा—

काशी के कवि की कृति-झंकार को
कांची के कवि के सुनने के लिए
गगन पथ से हम स्वर यंत्र बनावें।

पहले कवि आकाश की ओर ताकता था और स्वप्न देखता था। पर आजकल विज्ञान की आशा-किरणों में चमककर उसकी आंखें जमीन पर आ गयी हैं। अब वह कहने लगा है, स्वर्ग का निर्माण हम यहीं करेंगे। स्वर्ग के निर्माण के लिए साहित्य और विज्ञान दोनों कंधे भिडाकर काम करने लगे हैं। हृदय और मस्तिष्क जब तक अन्योन्याश्रित हैं तब तक जीवन स्वर्ग बन सकता है। मस्तिष्क विज्ञान की खोजें करता रहता है, पर प्रकृति की वे शक्तियाँ मनुष्य की द्वेष, लोभ आदि दुर्बलताओं के सांचे में ढलकर भयंकर स्वरूप जब धारण कर लेती हैं तब मनुष्यत्व पूर्ण हृदय को, प्रगतिशील साहित्य की भावनाओं को उनपर आपत्ति करनी पडती है।

आजकल यही स्थिति है। साहित्य में मानवता का स्वरगुंजार है; इसलिए कि विज्ञान के हाथ में अणुबम है जो मानवता का जन्म शत्रु है। अतः सर्वत्र ही क्रान्ति मची हुई है। निर्मम विज्ञान की पाषाणमूर्ति में हृदय जडने के लिए साहित्य देवी अपने करुण कण्ठ से विलाप रही है॥

Exchange List.

1. Pachaiyappa's College Magazine, Madras.
2. Gudivada College Magazine, Gudivada.
3. Mahatma Gandhi Memorial College Magazine, Udipi.
4. Annamalai University Magazine.
5. The St. Aloysius College Annual, Mangalore.
6. Findlay High School Magazine, Mannargudi.
7. Mashel Islamiah College Magazine, Vaniyambadi.
8. Govt. Training College & School Miscellany, Mangalore.
9. Mangalore Arts College Magazine, Mangalore.
10. Farook College Annual, Feroke.
11. Thiagaraja College Magazine, Madura.
12. The Magazine, St. Thomas College, Trichur.
13. Andhra Christian College Magazine, Guntur.
14. Madras Veterinary College Annual, Madras.
15. C. R. Reddy College Magazine, Eluru.
16. Voorhees College Magazine, Vellore.
17. Govt. Brennen College Magazine, Tellicherry.
18. Madras Christian College Magazine, Tambaram.
19. Madras Law College Magazine, Madras.
20. Teacher's College Magazine, Saidapet.
21. St. Xavier's College Magazine, Palamcottah.
22. Govt. Victoria College Magazine, Palghat.
23. Govt. Arts College Magazine, Rajahmundry.
24. National College Magazine, Trichy.
25. Hindu College Magazine, Masulipatam.
26. Zamorin's College Magazine, Calicut.
27. Malabar Christian College Magazine, Calicut.

28. Theosophical College Magazine, Madanapalli.
29. Maharaja's College Magazine, Pudukottah.
30. Loyola College Magazine, Madras.
31. St. Joseph's College Magazine, Trichy.
32. The Presidencian, Madras.
33. Alagappa College Hostel Magazine, Karaikudi.
34. Senthil Kumara Nadar College Magazine, Virudunagar.
35. The Guruvayurappan College Miscellany, Kozhikode.
36. Mrs. A. V. N. College Magazine, Vizagapatam.
37. Alagappa Training College Journal of Education, Karaikudi.
38. Government College Magazine, Mercara.
39. M. D. T. Hindu College Magazine, Tinnevelly.
40. Mahatma Gandhi College Magazine, Trivandrum.
41. Queen Mary's College Magazine, Madras.
42. Salem College Magazine, Salem.
43. New College Magazine, Madras.
44. P. S. G. College Magazine, Peelamedu, Coimbatore.
45. Government Arts College Magazine, Coimbatore.
46. The Madura College Magazine, Madura.
47. Srinarayana College Magazine, Quilon.
48. Sanatana Dharma College Magazine, Alleppey.
49. Govt. Arts College Magazine, Madras.
50. The American College Magazine, Madura.

IN MEMORIAM.

The Following Four Distinguished
Old Boys of Our College,
passed away in the year 1953.

Sri T. R Venkatarama Sastri, B. A., B. L., C. I. E.

Sri S. Muthia Mudaliar, B. A., B. L.

Sri S. Panchapakesa Sastri M. A., B. L.

Sri Kulapathi R. Swaminatha Ayyar, B. A., L. T.

Sri Venkateswara Photo Studio,

Town High School Road, Kumbakonam.

*

Our Speciality is neat and Prompt Service
To Amateur Photographers.

**We also undertake Enlargements and
Out-door Groups of High Schools & Colleges.**

**We Develop Amateur-Films, Print & Enlarge
Amateur Negatives Very Promptly.**

We also deal in Photo goods of every variety.

Prop. M. PERIASWAMY

COLLEGE BOOKS & NOTES

Our Speciality ! A Trial will Convince You !

FOR ALL YOUR REQUIREMENTS

P. V. NATHAN & Co.

Book Sellers & Publishers

Town High School Road : : Kumbakonam.

Stockists of :

B. A., B. Sc., INTER, TEXT-BOOKS & Various Guides by
ALL EMINENT AUTHORS.

Highly Useful for the Examinations.

Also For High Schools, Secondary Schools & Elementary Schools.



Indian Electric Stores

29, Town High School Road

KUMBAKONAM

*

Dealers in all electrical accessories, World Famous "Marconi Radios", "G. E. C.", "Crompton" Kassels and other makes of **Ceiling & Table fans.**



- House wiring executed to the entire satisfaction on Contract Basis.
- Temporary lighting & Loud speaker arrangements arranged at cheap rates.
- Radio Servicing done best at cheap rates.

Motto :— "Service to Public"

SRI VIDYA DIARIES * SRI VIDYA DIARIES * SRI VIDYA DIARIES

SRI VIDYA DIARIES * SRI VIDYA DIARIES

SRI VIDYA DIARIES * SRI VIDYA DIARIES

USE

ALWAYS

"SRI VIDYA" DIARIES

Phone: 32

Publishers:

Sri Vidyā Publishing House, Kumbakonam.

SRI VIDYA DIARIES * SRI VIDYA DIARIES * SRI VIDYA DIARIES

Always at your Service at Kumbakonam

ARYA BHAVAN

Boarding & Lodging

110, 112 BIG STREET

Branches

ARYA BHAVAN (Branch)	NEW RENGA VILAS,
MUTT STREET	Railway Station Road
KUMBAKONAM	KUMBAKONAM

We are arranging the best coffee & tiffin; delicious, excellent and homely meals. Our motto is the entire satisfaction of our customers.

We have undertaken TEA & DINNER Parties for the Athletic and other Associations, Staff Club and National Cadet Corps of the Government College, Kumbakonam.

P. K. GANGADHARAN,
&
R. M. P. SEETHARAMAN
Managers.

M. R. SETHURAMA IYER,
Proprietor,

Printed at the Sri Vidya Power Press, Kumbakonam.